செ.வெ.எண்: 746 நாள்: 16.11.2020

**தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் காணொளி காட்சி வாயிலாக 20.11.2020 அன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப.,அவர்கள் தகவல்.**

தஞ்சாவூர் மாவட்டத்தில் நவம்பர் 2020 மாத விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் எதிர்வரும் 20.11.2020 வெள்ளிக்கிழமை அன்று முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை மாவட்ட ஆட்சியர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் காணொளி காட்சி மூலம் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் இவ்வாண்டு துறை வாரியாக செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட உள்ளது. மேலும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளும் முன்னோடி விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் அனைவரும் வேளாண்மை, தோட்டக்கலை, நீர்ப்பாசனம், கால்நடை, கூட்டுறவு, மின்சாரம், வேளாண்மைப் பொறியியல், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் ஆகியவற்றில் விவசாயம் தொடர்புடைய கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

காணொளி காட்சி மூலம் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலந்து கொள்ள வசதியாக தஞ்சாவூர், பூதலூர், ஒரத்தநாடு,, பட்டுக்கோட்டை, பேராவூரணி, திருவோணம், கும்பகோணம் மற்றும் திருப்பனந்தாள் ஆகிய வட்டாரங்களில் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்திலும், திருவையாறு, மதுக்கூர், சேதுபாவாசத்திரம், அம்மாப்பேட்டை, திருவிடைமருதூர் மற்றும் பாபநாசம் ஆகிய வட்டாரங்களில் வட்டார வளர்ச்சி அலுவலகத்திலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. தொடர்புடைய அலுவலகங்களில் விவசாயிகள் அரைமணி நேரம் முன்னதாக சென்று பேசுவதற்கு உரிய முன்னுரிமையை பதிவு செய்திட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் கொரோனா தொற்று பரவுதலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் விவசாய பெருமக்கள் சமூக இடைவெளியுடன், முகக்கவசம் அணிந்து கலந்து கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ம.கோவிந்த ராவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.